ஒன்ராறியோ பணித் தராதரச் சட்டம் குறித்து

# நீங்கள் அறிய வேண்டியவை

ஈஎஸ்ஏ என அறியப்படும் பணித்தராதரச் சட்டம் (Employment Standards Act ) 2000, ஒன்ராறியோவில் உள்ள பணியிடங்களுக்கான குறைந்த பட்சத் தராதரங்களை வரையறுக்கும் சட்டமாகும். நீங்கள் ஒன்ராறியோவில் பணியாற்றுகிறீர்கள் என்றால், பெரும்பாலும் ஈஎஸ்ஏ சட்டத்தின் பாதுகாப்பு உங்களுக்கு உண்டு. சமஷ்டி அரசு ஊழியர்கள் மற்றும் சில விசேட பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஈஎஸ்ஏ சட்டப் பாதுகாப்பு கிடைக்காது. சில பணியாளர்களுக்கென சிறப்பு விதிகளும் விதிவிலக்குகளும் உள்ளன. மேலும், ஈஎஸ்ஏ சட்ட உரிமைகள் அனைத்தும் அனைத்துப் பணியாளர்களுக்கும் பொருந்தாது.

## பணியிடத்தில் உங்கள் உரிமைகளும் பொறுப்புகளும்

ஈஎஸ்ஏ சட்ட உரிமைகளைக் கோரியதற்காக அல்லது அவற்றைப் பற்றி கேட்டதற்காக பணியாளர் எவரையும் வேலையளிப்பவர் மிரட்டவோ, வேலைநீக்கம் செய்யவோ, வேலை இடைநிறுத்தம் செய்யவோ, வேறு விதத்தில் தண்டிக்கவோ அல்லது இவற்றில் எதையேனும் செய்யப் போவதாக அச்சுறுத்தவோ முடியாது. வேலையளிப்பவர் ஒருவர் ஈஎஸ்ஏ சட்டத்தைப் பின்பற்றத் தவறுகிறார் என்று ஒரு பணியாளர் கருதினால், அவர் தொழில் அமைச்சினை உதவி பெறத் தொடர்பு கொள்ளலாம்.

**குறிப்பு:** சங்கம் அமைத்துள்ள பணியாளர்கள் தமது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கருதினால், தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பாகத் தமது சங்கப் பிரதிநிதியிடம் பேசவேண்டும்.

**வேலைநேரம்** - பொதுவாக, பின்வரும் நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்யத் தொழிலாளர்களை நிர்ப்பந்திக்க முடியாது:

- நாளொன்றுக்கான வரையறை: ஒரு நாளுக்கு 8 மணி நேரம், அல்லது 8 மணி நேரத்திற்கும் அதிகமாக இருந்தால் வழக்கமான ஒரு வேலை நாளில் உள்ள மணித்தியாலங்கள். பணியாளர்களிடமிருந்து எழுத்துமூலம் அவர்களின் ஒப்புதலைப் பெறவெண்டுமென்ற தேவை பூர்த்தி செய்யப்படுமானால் பணியாளர்கள் நாளொன்றுக்கான வரையறைக்குக் கூடுதலாக வேலை செய்யலாம்.
- வாரமொன்றுக்கான வரையறை: ஒரு வாரத்தில் 48 மணி நேரம். பணியாளர்களிடமிருந்து எழுத்துமூலம் அவர்களின் ஒப்புதலைப் பெறவெண்டுமென்ற தேவை பூர்த்தி செய்யப்பட்டு, அத்துடன் வேலையளிப்பவர் பணித்தராதரப் பணிப்பாளரிடம் இருந்து உரிய அனுமதி பெற்றிருந்தால் பணியாளர்கள் ஒரு வாரத்தில் 48 மணி நேரத்திற்கும் கூடுதலாக வேலை செய்யலாம். (குறித்த சில சந்தர்ப்பங்களில், இதற்காக அனுமதி கோரும் விண்ணப்பம் குறைந்தது 30 நாட்களாயினும் முடிவுக்காகக் காத்து நிற்குமானால், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட முறையில் வாரமொன்றுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மணித்தியாலங்களுக்கு மேலாக வரையறுத்த சில மணி நேரம் பணியாளர்கள் வேலை செய்யலாம்.)

**ஓய்வு நேரங்கள்** - பொதுவாக, பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் பின்வரும் ஓய்வு தரப்பட வேண்டும்.

- ஒவ்வொரு நாளிலும் வேலைக்குப் பிறகு தொடர்ந்து 11 மணி நேரம்
- ஒவ்வொரு வார வேலைக்குப் பிறகும் 24 மணி நேரம், அல்லது 2-வார வேலைக்குப் பிறகு 48 மணி நேரம்

**மேலதிக நேர வேலைக்கான ஊதியம்** - பெரும்பாலான பணியாளர்களுக்கு வாரத்தில் 44 மணி நேரத்திற்கும் அதிகமாக வேலை செய்த நேரத்திற்கு மேலதிக நேர ஊதியம் தரப்பட வேண்டும். மேலதிக நேர வேலைக்கான ஊதிய விகிதம், வழக்கமான ஊதிய விகிதத்தைப் போல குறைந்த பட்சம் ஒன்றரை மடங்கு இருக்க வேண்டும்.

**குறைந்தபட்ச ஊதியம்** - பெரும்பாலான பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியமாவது பெறும் உரிமையுண்டு. அவை பின்வருமாறு:

| பிப்ரவரி 1, 2007 | மார்ச்சு 31, 2008 | மார்ச்சு 31, 2009 | மார்ச்சு 31, 2010 |
|---|---|---|---|
| மணிக்கு $8.00 | மணிக்கு $8.75 | மணிக்கு $9.50 | மணிக்கு $10.25 |

**குறிப்பு:** மாணவர்கள், மதுபானம் பரிமாறுவோர், வீட்டு வேலை செய்வோர், வேட்டை மற்றும் மீன்பிடித்தல் வழிகாட்டிகளுக்கான குறைந்த பட்ச ஊதியம் வேறாகும்.

**சம்பள தினம்** - பணியாளர்களுக்கு கிரமம் ஆக வரும் குறிப்பிட்ட ஒரு சம்பள தினத்தில் ஊதியம் தரப்படல் வேண்டும். அவர்களுக்கு ஊதிய காலத்திற்கான சம்பளம் மற்றும் கழிவீடுகள் ஆகிய விவரங்கள் கொண்ட விபரக்கூற்று அளிக்கப்பட வேண்டும்.

**பணிவிடுமுறையும் சம்பளமும்** - பெரும்பாலான பணியாளர்களுக்கு, அவர்கள் வேலை செய்த ஒவ்வொரு 12 மாத காலத்திற்குப் பிறகும் குறைந்த பட்சம் 2 வார பணிவிடுமுறை தரப்பட வேண்டும். வழங்கப்பட்ட மொத்த ஊதியத்தில் குறைந்த பட்சம் 4 சதவீதத்தையாவது பணிவிடுமுறைக்கால ஊதியமாகப் பெறப் பணியாளர்களுக்கு உரிமை உண்டு.

**பொதுவிடுமுறைகள்** - ஒன்ராறியோவில் ஆண்டுக்கு 9 பொது விடுமுறைகள் உண்டு. (புத்தாண்டு தினம், குடும்ப தினம், பெரிய வெள்ளி தினம், விக்ரோறியா தினம், கனடா தினம், உழைப்பாளர் தினம், நன்றிவழங்கல் தினம், நத்தார் தினம், டிசம்பர் 26). பெரும்பாலான பணியாளர்கள் இந்நாட்களை பொதுவிடுமுறை ஊதியத்துடன் கூடிய விடுமுறைகளாக அனுபவிக்க முடியும்.

**பணிக்கு வராத விடுப்புகள்** - தகுதியுடைய பணியாளர்கள் ஊதியமற்ற, வேலை உத்தரவாதமுடைய பின்வரும் விடுப்புகள் எடுக்கலாம்:

- 17 வாரங்கள் கர்ப்பகால விடுப்பு
- 35 அல்லது 37 வாரங்கள் குழந்தை கவனிப்புக்கான விடுப்பு
- ஊழியருக்கு உடல்நலமின்மை, காயமடைதல், அவசர மருத்துவ நெருக்கடி அல்லது குறித்தவகைக் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் இறந்து விடுதல், நோய்வாய்ப்படுதல், காயமடைதல், அவசர மருத்துவ உதவி தேவைப்படுதல் அல்லது அவர்கள் தொடர்பான வேறேதேனும் அவசரப் பிரச்சினை ஏற்படுதல் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு காலண்டர் வருடத்திலும் 10 நாட்கள் தனிப்பட்ட அவசர விடுப்பு.
- பணியாளரின் குறித்தவகைக் குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரை ஒரு குடும்ப உறுப்பினர் போன்று கருதுபவர்கள் எவரேனும் நோய்வாய்ப்பட்டு, 26 வாரங்களுக்குள் உயிரிழக்கக் கூடிய ஆபத்தில் இருந்தால், அவர்களைக் கவனித்துக் கொள்ளவென்று 26 வார காலத்தில் அடங்கும் 8 வாரக் குடும்ப மருத்துவ விடுப்பு.
- பிரகடனம் செய்த அவசர விடுப்பு
- பிரத்தியேகப் படையணி உறுப்பினர் விடுப்பு

**வேலைநீக்க அறிவிப்பு மற்றும் ஊதியம்** - பொதுவாக, பணியாளர் ஒருவர் தொடர்ச்சியாக 3 மாதங்கள் அல்லது அதற்கும் அதிகமாகப் பணியாற்றி இருந்து அவரை வேலை நீக்கம் செய்வதானால், வேலையளிப்பவர் முன்னதாகவே எழுத்து மூலமான அறிவித்தல் அல்லது வேலைநீக்கத்துக்கான ஊதியம், அல்லது இரண்டும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

**இளம் தொழிலாளர்கள்** - ***பணியிடத்தில் உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு தயவுசெய்து www.labour.gov.on.ca/english/site/youngworkers என்ற இணையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்.***

ஈஎஸ்ஏ சட்டத்தின்படி கிடைக்கக் கூடியனவாக இந்தப் பிரசுரத்தில் இடம் பெறாத வேறு சில உரிமைகளும் உண்டு.

## மேலதிக தகவல் பெறுவதற்கு தொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்க

அழையுங்கள்: 416-326-7160 அல்லது கட்டணமின்றி 1-800-531-5551 அல்லது செவிப்புலன் குறைபாடு உள்ளோர் (Hearing Impaired) TTY 1-866-567-8893. மேலதிக தகவல் பெறுவதற்கும் அமைச்சுடன் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்வதற்கும் www.labour.gov.on.ca என்ற இணையத்தளத்திற்குச் செல்லுக. பணித் தராதரங்கள் தொடர்பான கோரிக்கைப் படிவங்களை எந்தவொரு சேவைஒன்ராறியோ நிலையம் (ServiceOntario Centre) சென்றும் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் அருகில் உள்ள நிலையத்தை அறிய அழையுங்கள்: 1-800-267-8097.

**Version 4.0**

© Queen's Printer for Ontario, 2008 Printed in Canada
ISBN 978-1-4249-5878-8 (Print)
ISBN 978-1-4249-5879-5 (HTML)
ISBN 978-1-4249-5880-1 (PDF)

Tamil
"What You Should Know about the Ontario Employment Standards Act" is also available in English, French, and other languages.
« Ce qu'il faut savoir sur la *Loi sur les normes d'emploi* de l'Ontario » est également disponible en anglais, en français et en d'autres langues.